## 2023 ஆம் ஆண்டுக்காக இலவசமாக வழங்கப்படும் பாடநூல்களைக் கோருதல்

2023 ஆம் ஆண்டு அரசாங்கப் பாடசாலைகள், அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள், மற்றும் பிரிவெனாக்களில் பயன்படுத்துவதற்குத் தேவையான பாடநூல்களின் தேவை தொடர்பிலான புள்ளிவிவரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள கணினி மென்பொருளைப் பயன்படுத்தி சரியான புள்ளி விவரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்கின்றேன்.

### அதற்காகப் பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றுங்கள்

(1) இதற்கான ஆரம்பப் படிமுறையாக (google) க்குச் சென்று https://textbooks.moe.gov.lk என டைப்செய்து வெப்தளத்தில் உள்நுழையுங்கள். அப்போது உங்களுக்குக் கணினியில் பின்வரும் திரையைக் காணமுடியும்..




பாடசாலைத் தகவல்களை பதிவிடும் பொருட்டு மேலுள்ள திரையில் காணப்படும் Schools என்பதைக் Click செய்யவும்.

### (2) அப்போது கீழுள்ள திரையைக் காண முடியும்.



(a) மேலே திரையில் **ஆலோசனைகள் - சிங்களம்** எனும் சொல்லின் மேல் **click** செய்வதன் மூலம் சிங்கள மொழிமூல ஆலோசனைகளையும் **தமிழ்** எனும் சொல்லின் மேல் **click** செய்வதன் மூலம் தமிழ் மொழிமூல ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

(b) மேலே திரையின் **Form-Download** பகுதியைக் **Click** செய்வதன் மூலம் உங்களுக்குரிய படிவங்களை **Download** செய்துகொள்ள முடியும்.

(c) உங்களுக்கு வலயக் கல்விக் காரியாலயத்தின் பாடநூல்களுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப்பணிப்பாளர் / பிரதிக் கல்விப்பணிப்பாளர் மூலம் வழங்கப்படும் Username மற்றும் Password களைப் பயன்படுத்தி மென்பொருளில் பிரவேசியுங்கள். அதன் பின் உங்களுக்கு கீழ்வரும் திரையைக் கணினியில் காணமுடியும்.


School Registration for Year 2023

**සියලුම විදුහල්පතිවරුන් හා පෙළ පොත් කටයුතු භාර ආචාර්ය භවතුන්වෙත,**

අප විසින් මෙම පරිගණක වැඩසටහන සඳහා තාවකාලිකව ඔබට ලබා දී ඇති Password ඔබ විසින් අනිවාර්යයෙන්ම වෙනස්කර ගත යුතු වේ. ඔබේ නව Password සුරක්ෂිතව සටහන් කර තබා ගැනීමට ද කරුණාකර කටයුතු කරන්න.

**அனைத்து அதிபர்கள் மற்றும் பாநூல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கு,**

எங்களால் இந்தக் கணனி வேலைத்திட்டத்துக்காகத் தற்காலிகமாக உங்களுக்கு வழங்கப்பட்ட Password தங்களால் கட்டாயமாக மாற்றிக்கொள்ளப்பட வேண்டும். உங்களின் புதிய Password யைப் பாதுகாப்பாக குறித்துக்கொள்ளப்பட்டு வைத்துக் கொள்ளப்படுவதற்கு தயவு செய்து நடவடிக்கை எடுக்கவும்.

Username

Usch24430

New Password

Re-enter New Password

Preferred Lnaguage

Sinhala Tamil English

Submit

**(03) புதிய கடவுச்சொல்லை (New Password) ஆக்குதல்.**

(a) மேலே கணித்திரையில் New Password எனும் இடத்தில் புதிய கடவுச் சொல்லைப் (Password) பதிவிடுங்கள்.

(b) அடுத்து Re-Enter New Password எனும் இடத்தில் ஏற்கனவே உள்வாங்கிய கடவுச் சொல்லை (Password) மாற்றங்களேதுமின்றி மீண்டும் பதிவிடுங்கள்.

(c) **மிகவும் முக்கியமானது** - உங்களால் பதிவிடப்பட்ட புதிய கடவுச்சொல்லை (New Password) சரியாகக் குறித்து வைத்துப் பாதுகாத்துக் கொள்வது உங்கள் பொறுப்பாகும். ஏதும் காரணத்தினால் புதிய கடவுச்சொலலை (Password) மறந்தால் அல்லது தொலைத்திருந்தால் epd.distribution@gmail.com எனும் மின் அஞ்சல் முகவரிக்கு (i) முன்னர் வழங்கப்பட்ட Username மற்றும் Password (ii) பாடசாலையின் / நிலையத்தின் பெயர், முகவரி மற்றும் குறியீட்டு எண் (Distribution Centre code no.) போன்ற விபரங்கள் உள்ளடங்கிய மின் அஞ்சல் செய்தியொன்றை அனுப்பி புதிய Password ஐப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

(d) அதன் பின்னர் கணினித் திரையில் இரண்டாம் பகுதியிலுள்ள Preferred Language எனும் இடத்தில் இக்கணினி மென்பொருளைப் பயன்படுத்துவதற்கு உங்களுக்கு விருப்பமான மொழிமூலத்தைத் தெரிவுசெய்யுங்கள்.

(e) பின்னர் Submit பகுதியைக் Click செய்யுங்கள். அதன்பின்னர் கீழே (4) இன் கீழ் காணப்படும் திரையைக் கணினியில் காணமுடியும்.

(4)




உங்கள் கணினித் திரையில் தோன்றும் Proceed எனும் சொல்லைக் Click செய்யுங்கள். அப்போது உங்களுக்கு மேலே (1) ஆம் பந்தியில் காணும் திரை மீண்டும் தோன்றும். அங்கு Schools எனும் சொல்லைக் Click செய்யுங்கள். இப்போது உங்களுக்கு மேலே (2) ஆம் பந்தியில் காணும் திரை மீண்டும் தோன்றும்.

உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள Username மற்றும் உங்களால் புதிதாக ஆக்கப்பட்ட கடவுச் சொல்லை (Password) பதிவிடுங்கள் - அப்போது உங்களுக்கு பாடசாலையின் தகவல்கள் உள்ளடங்கிய கீழ்வரும் திரை தோன்றும். நீங்கள் பாடசாலைக்குரியதான தகவல்கள் சரியானதா எனப் பாருங்கள். Grade Span, Principal's Details, Details of the Teacher In-charge எனும் தலைப்புகளின் கீழ் கேட்கப்பட்டுள்ள தகவல்களை கணினிமயப்படுத்தி Submit எனும் பகுதியைக் click செய்யுங்கள்.




தகவல்களைக் கணினிமயப்படுத்தி Submit பகுதியைக் click செய்தபின் கீழுள்ள கணினித் திரை தோன்றும் மீண்டும் உங்கள் கணினித் திரையில் காணப்படும் Proceed எனும் சொல்லைக் click செய்யுங்கள்.




(5) தற்போது உங்களுக்கு மேலே (1) ஆம் பந்தியில் காணப்படும் திரை மீண்டும் தோன்றும். அங்கு School எனும் சொல்லைக் Click செய்யுங்கள். தற்போது உங்களுக்கு மேலே (2) ஆம் பந்தியில் காணப்படுகின்ற திரை மீண்டும் தோன்றும். இக்கணினித் திரையின் கீழ்ப்பகுதியில் உங்கள் Username மற்றும் உங்கள் புதிய கடவுச் சொல்லை (Password) பதிவிடுங்கள். அதன்போது உங்களுக்குக் கீழுள்ள கணினித் திரை தோன்றும். இங்கு காணப்படும் வகுப்புக்களின் அளவானது உங்கள் பாடசாலையின் வகுப்பு வரம்பிற்கு (Grade Span) ஒத்திருக்கும்.

| | | |
|---|---|---|
| Grade 1 | Grade 2 | Grade 3 |
| Grade 4 | Grade 5 | Grade 6 |
| Grade 7 | Grade 8 | Grade 9 |
| Grade 10 | Grade 11 | Grade 12 |

i. தற்போது உங்கள் பாடசாலையின் தகவல்களைக் கணினிமயப்படுத்தும் சந்தர்ப்பம் வந்துள்ளது.

ii. தற்போது நீங்கள் மேலே (2) ஆம் பந்தியின் (b) பிரிவில் காட்டப்பட்டுள்ள படிவங்களை download செய்து அச்சுப் பிரதியை பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

iii. அதன் பின்னர் ஒருமுறைக்கு ஒரு வகுப்பு என்ற விதமாகத் தெரிவுசெய்து தரவுகளைப் பதிவிடுங்கள்.

iv. மேலுள்ள திரையில் காணப்படும் Grade 1 பகுதியை Click செய்யும்போது தோன்றும் கணினித் திரையைக் கீழே காணலாம்.

Sinhala Medium Books

| Subject | Total Students | Remaining Books | Reusing Books | Additional Books | Total books | Submit | Clear |
|---|---|---|---|---|---|---|---|
| SC01110S - බුද්ධ ධර්මය 1 ශ්‍රේණිය | | | | | | Submit | Clear |
| SC01150S - ක්‍රිස්තු ධර්මය (සිං) 1 ශ්‍රේණිය | | | | | | Submit | Clear |
| SC01140S - කතෝලික ධර්මය (සිං) 1 ශ්‍රේණිය | | | | | | Submit | Clear |
| SC01160S - ඉස්ලාම් (සිං) 1 ශ්‍රේණිය | | | | | | Submit | Clear |
| SC0121PS - සිංහල කියවීම් පොත 1 ශ්‍රේණිය | | | | | | Submit | Clear |
| SC0121WS - සිංහල වැඩ පොත 1 ශ්‍රේණිය | | | | | | Submit | Clear |
| SC01320S - ගණිතය (සිං) 1 ශ්‍රේණිය | | | | | | Submit | Clear |

(v) ஒவ்வொரு நூலுக்குமுரியதான மொத்த மாணவர்தொகை (Total students) தற்போது எஞ்சியுள்ள நூல்களின் தொகை (Remaining Books) மீள்பாவனைக்குரிய நூல்களின் தொகை (Reusing Books) மேலதிகமாகத் தேவைப்படும் நூல்கள் (Additional Books) போன்றவற்றை உரிய கூட்டில் உள்ளடக்கி Submit இன்மீது Click செய்யுங்கள்.

(vi) Submit இன் மீது Click செய்தபின் ஏதும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமெனின் Clear மீது Click செய்து மீண்டும் எண்ணிக்கைகளைப் பதிவிடுங்கள்.

(vii) இவ்வாறு உங்களுக்கு சகல வகுப்புகளுக்காகவும் தரவுகளைப் பதிவிட முடியும்.

## (6) கணினியில் பதிவு செய்த தரவுகளைச் சரிபார்த்தலும் அறிக்கையைப் பெற்றுக் கொள்ளலும்

View Profile | View Data | Instructions

| | | |
|---|---|---|
| Grade 1 | Grade 2 | Grade 3 |
| Grade 4 | Grade 5 | Grade 6 |

(a) கணினியில் பதிவு செய்த தரவுகளை சரிபார்த்துக்கொள்ள மேலுள்ள திரையின் மேலே வலது பக்கத்தில் காணப்படும் View Data மூலம் முடியும்.

(b) View Data பகுதியை Click செய்யும்போது உங்களுக்கு கீழுள்ள திரையைக் கணினியில் காணமுடியும்.

Download data

Grade 01

| Subject | Total Students | Remaining Books | Reusing Books | Additional Books | Total books |
|---|---|---|---|---|---|
| **Sinhala Medium** | | | | | |
| 001 - බුද්ධ ධර්මය 1 ශ්‍රේණිය | 25 | 2 | 0 | 1 | 24 |
| 003 - ක්‍රිස්තු ධර්මය (සිං) 1 ශ්‍රේණිය | 3 | 2 | 0 | 1 | 2 |
| 005 - කතෝලික ධර්මය (සිං) 1 ශ්‍රේණිය | 0 | 0 | 0 | 1 | 1 |
| 007 - ඉස්ලාම් (සිං) 1 ශ්‍රේණිය | 0 | 0 | 0 | 1 | 1 |
| 009 - සිංහල කියවීම් පොත 1 ශ්‍රේණිය | 25 | 5 | 0 | 1 | 21 |
| 010 - සිංහල වැඩ පොත 1 ශ්‍රේණිය | 25 | 1 | 0 | 1 | 25 |
| 015 - ගණිතය (සිං) 1 ශ්‍රේණිය | 25 | 1 | 0 | 1 | 25 |
| **Common Books** | | | | | |
| 013 - My Activity Book 1 ශ්‍රේණිය | 25 | 4 | 0 | 2 | 23 |
| 014 - ABOE Song Book 1 ශ්‍රේණිය | 25 | 4 | 0 | 2 | 23 |

(c) மேலுள்ள திரையின் Download Summary மூலம் உங்களால் பதிவிடப்பட்ட தகவல்களை கீழ்வரும் விதத்தில் Excel கோவையொன்றாகவும் நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.



| A | B | C | D | E | F |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| School Name-HATHGAMPALA M.V. | | | | | |
| Census-24421 | | | | | |
| | | | | | |
| Grade 01 | | | | | |
| | | | | | |
| Subject | Total Students | Remaining Books | Reusing Books | Additional Books | Total books |
| Sinhala Medium | | | | | |
| 001 - බුද්ධ ධර්මය 1 ශ්‍රේණිය | 25 | 2 | 0 | 1 | 24 |
| 003 - ක්‍රිස්තු ධර්මය (සිං) 1 ශ්‍රේණිය | 3 | 2 | 0 | 1 | 2 |
| 005 - කතෝලික ධර්මය (සිං) 1 ශ්‍රේණිය | 0 | 0 | 0 | 1 | 1 |
| 007 - ඉස්ලාම් (සිං) 1 ශ්‍රේණිය | 0 | 0 | 0 | 1 | 1 |
| 009 - සිංහල කියවීම් පොත 1 ශ්‍රේණිය | 25 | 5 | 0 | 1 | 21 |
| 010 - සිංහල වැඩ පොත 1 ශ්‍රේණිය | 25 | 1 | 0 | 1 | 25 |
| 015 - ගණිතය (සිං) 1 ශ්‍රේණිය | 25 | 1 | 0 | 1 | 25 |
| Common Books | | | | | |
| 013 - My Activity Book 1 ශ්‍රේණිය | 25 | 4 | 0 | 2 | 23 |
| 014 - ABOE Song Book 1 ශ්‍රේණිය | 25 | 4 | 0 | 2 | 23 |

(d) Logout மூலம் உங்களுக்குக் கணினிச் செயற்பாட்டை Close செய்யமுடியும்.